பதிவு எண். M 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 15 (1—12—71) புதன் வெளியூர்: கார்த்திகை 16 (2—12—71) வியாழன் [இதழ்: 141

மேற்படிப்புக்கு தமிழக அரசு வழங்கும் உதவி

சென்னை, டிச. 1—

1971—72-ம் ஆண்டில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 1,052 மாணவர்களுக்கு அரசாங்கம் கடனுக உதவிப் பணம் அளிக்கிறது; அவர்களுடைய மேற்படிப்புக்காக இந்த உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

இந்தத் தகவலை, தமிழக அரசு நேற்று அறிவித்தது.

மாநில உரிமையை மேலும் பறிப்பதா?

முதல்வர்களைக் கலக்காமலே மத்திய அரசின் புதிய ஏற்பாடு ஏன்?

நாடாளுமன்ற தி. மு. க. கடும் கண்டனம்

அரசியல் சட்டத் திருத்த மசோதாவுக்கு ஆதரவளிப்பது குறித்து நிலை விளக்கம்

புதுடில்லி, நவ. 30—

அரசியல் அமைப்புச் சட்ட (25-வது திருத்த) மசோதாவுக்கு நாடாளுமன்ற தி. மு. கழக உறுப்பினர்கள் பொதுவான ஆதரவு அளித்தபோதிலும், அரசியல் சட்ட 39 (பி--சி) ஆகிய பிரிவுகளில் உள்ள நேரடியான கட்டளையைச் செயல்படுத்தும் நோக்குடன் எந்த ஒரு மாநிலச் சட்டமன்றமாவது ஏதேனும் சட்ட மியற்றுமானுல், அதற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் வேண்டும் எனற விதியை நீக்குமாறு வற்புறுத்துவார்கள் என்று தெரிகிறது.

இன்று காலை இங்கு கூடிய நாடாளுமன்ற தி. மு. க. குழு கூட்டத்தில் இவ்விதம் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்ற தி. மு. க. குழுவின் துணைத் தலைவரான திரு. இரா. செழியன் இதுபற்றித் தெரிவித்ததாவது:—

"இந்த ஏற்பாடு, மத்திய -- மாநில அரசுகளுக்கிடையிலான உறவில் ஒரு புதிய நிலையைத் தோற்றுவிப்பதாக உள்ளது.

இந்தப் புதிய ஏற்பாட்டின்படி, மாநில அரசுக்குரிய விவகாரங்கள் தொடர்பான சட்டம் இயற்றினுல்கூட, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற வேண்டும் -- என்று ஆகிறது; மாநில அரசின் அதிகாரத்தில் மேலும் தலையிடுவதற்கே இது வழிகோலும்; எனவே, இந்த ஏற்பாட்டை தி. மு. கழகம் எதிர்க்கும் என்று ஆளுங் கட்சித் தலைவர்களிடம் ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம்.

இத்தகைய சட்டங்களை இயற்ற மாநிலச் சட்டமன்றத்திலும் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை வேண்டும் என்பதையும் தி. மு. கழகம் எதிர்க்கிறது.

மாநில முதலமைச்சர்களை முன் கூட்டிக் கலந்தாலோசிக்காமலே மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்களைப் பாதிக்கக்கூடிய மத்திய அரசு நிபந்தனைகளை விதிப்பது, முறையான செயலாகாது என்பதே தி. மு. கழகத்தின் கருத்தாகும்.

என நாடாளுமன்ற விவகார அமைச்சர் இராஜபகதூரைச் சந்தித்து தி.மு.க. குழுத் தலைவர் கி மனோகரனும் -- இந்தியக் கம்யூனிஸ்டுக் குழுத் தலைவரும் வலியுறுத்தினர்.

இந்த மசோதாவில் ஆளும்கட்சி சில பல மாற்றங்களைச் செய்யக் கருதியிருக்கிறது; 'இவ்வாறு மாற்றங்கள் செய்யப்பட்டால் அது இந்த மசோதாவைப் பலவீனப் படுத்திவிடும்' என்று மனோகரனும் -- கம்யூனிஸ்டுத் தலைவரும் தெரிவித்தனர்.

மேலவையில் ஆதரவு கிடைக்குமா?

மக்களவையில் ஆளும் கட்சியின் சொந்த பலத்தை வைத்தே— எந்த மாற்றத்தைச் செய்தாலும் காங்கிரசார் இந்த மசோதாவை நிறைவேற்றிவிட முடியும்; ஆனுல் மாநிலங்களவையில் தி. மு. கழகம் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதரவு இல்லாவிட்டால் மசோதா நிறைவேருது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

தமிழ் மக்களின் அரும் பண்புகள்

ஆளுநர் கே. கே. ஷா மனந்திறந்த பாராட்டு

டில்லி நகர மக்களிடையே விளக்கம்

புதுடில்லி, நவ. 30 -

"தமிழ்நாட்டைவிட்டு வெளியே புறப்பட்டுச் செல்வதற்கே மனம் வரவில்லை"

என்று தமிழக ஆளுநர் கே. கே. ஷா, உணர்ச்சிப் பெருக்குடன் குறிப்பிட்டார்.

டில்லி மக்கள் குழு, ஆளுநர் கே. கே. ஷாவுக்குக் கடந்த திங்கட்கிழமையன்று வரவேற்பு அளித்தது; அந்தக் கூட்டத்தில் அவர் உரையாற்றினுர்.

"தமிழ்நாட்டில் ஆறு மாத காலம் தங்கிப் பழகிவிட்ட பிறகு, அங்கிருந்து புறப்படுவதற்கே மனமில்லை; நான் அங்கிருந்து டில்லிக்குப் புறப்பட்டபோதுகூட, மிகவும் ஏக்கத்தோடுதான் புறப்பட்டேன்" என்று அவர் சொன்னுர்.

"தமிழ்நாட்டிலிருந்து தொலை தூரத்தில் உள்ள டில்லிவாழ் மக்களுக்குத் தமிழ்நாட்டையும் -- அதன் மக்களையும் பற்றிய சரியான தகவல் கிடைப்பதே இல்லை; தமிழ் மக்கள் சனநாயக வழியில் நடப்பவர்கள்; காரணகாரியங்களுக்குக் கட்டுப்பட்டு, நிதானத்துடன் இருப்பவர்கள்" என்று ஆளுநர் கே. கே. ஷா பாராட்டினுர்.

வெளிநாட்டுப் பயணிகட்குத் தடை

மேற்குப் பாகிஸ்தானில் கெடுபிடி

கராச்சி, டிச. 1—

மேற்குப் பாகிஸ்தானில் வடக்குப் பகுதியில், எந்த வெளிநாட்டுப் பயணியும் நுழையக்கூடாது -- என்று பாகிஸ்தான் இராணுவம் திடீரென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

இதே போல், பாகிஸ்தானைச் சேர்ந்த யாரும் இந்தியாவுக்குப் போகக்கூடாது என்றும் இராணுவம் தடையுத்தரவு போட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் போர் ஆயத்தம்

ராவல்பிண்டி, நவ. 30—

"1958-ம் ஆண்டு சனவரி 1-ந் தேதிக்குப் பிறகு பாகிஸ்தான் விமானப் படையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள அல்லது 'டிஸ்சார்ஜ்' ஆகியுள்ள விமானிகளில் 55 வயதுக்கு உட்பட்ட அனைவரும் மீண்டும் விமானப் படையில் சேர வேண்டும்" என்று பாகிஸ்தான் விமானப் படை உத்தரவிட்டிருக்கிறது.

வங்க தேச அங்கீகாரம்

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கோரிக்கை

இலண்டன், நவ. 30—

வங்க தேசத்தை அங்கீகரிக்க வேண்டுமென்றும், காமன்வெல்த்திலிருந்து பாகிஸ்தானை வெளியேற்ற வேண்டுமென்றும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கோரப்பட்டது; ஆனுல், இவ்விரு கோரிக்கைகளையும் தலைமையமைச்சர் எட்வர்டு ஹீத் நிராகரித்தார்.

அரசு ஊழியர் நியமனம்

தாழ்த்தப்பட்ட -- பிற்பட்ட வகுப்பினருக்கு 49 சதவிகிதம்

தமிழக அரசின் புதிய ஆணை

சென்னை, நவ 30

"ஒதுக்கீட்டு முறையில் உள்ள அரசாங்க அலுவல்களில் 49 சதவிகிதத்தைத் தாழ்த்தப்பட்டோர் -- மலை சாதியினர் -- பிற்பட்டோர் ஆகியவர்களுக்கு ஒதுக்க வேண்டும்" என்ற தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த ஆணை, கடந்த ஜூன் திங்கள் 7-ம் நாளைத் தொடக்கமாக வைத்துச் செயல்படுத்தப்படும்.

எஞ்சியுள்ள 51 சதவிகித இடங்கள் தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படும்.

தகுதியின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை, தாழ்த்தப்பட்டோர் -- மலைசாதியினர் ஆகியோரும் தகுதியிருந்தால் பெறலாம்.

மேற்கண்டவாறு தாழ்த்தப்பட்டோர் முதலியவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 49 சதவிகித இடங்களில் 31 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பினருக்கும், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டோர் -- மலைசாதியினர் ஆகியோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சருடன் மனோகரன் சந்திப்பு

'நாடாளுமன்றத்தின்முன் உள்ள அரசியல் சட்டத் திருத்த மசோதாவில் எந்த மாறுதலையும் செய்யக்கூடாது"

ஜம்மு எல்லையில் படைகளைக் குவிக்கிறது பாகிஸ்தான் ஆட்சி

ஜம்மு, நவ. 30—

ஜம்முவில் ரன்பீர்சிங்புரா பகுதிக்கு எதிராக பாகிஸ்தானில் உள்ள 'சப்ரார்' என்ற எல்லை நகரத்தில் பாகிஸ்தான் படைக் குவிப்பு காணப்பட்டது.

சப்ராரில் மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டுவிட்டார்கள்; அந்த நகரம் இராணுவத்தினரின் வசம் உள்ளது.

இந்துஸ்தான் உருக்கு நிறுவனத்தின் நிர்வாகச் சீர்கேடு

முதலீட்டிலேயே 31 சதவிகிதத்தை விழுங்கிவிட்டதாம்

புதுடில்லி, நவ. 30 -

அரசுத் துறை நிறுவனமான 'இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட்' அதன் பங்குகளாலான மூலதனத்தில் 31 சதவிகிதத்தை விழுங்கிவிட்டதாம்.

மக்களவையில் வைக்கப்பட்ட அரசுத் துறை நிறுவனங்கள் பற்றிய குழுவின் முதல் அறிக்கையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

"இந்துஸ்தான் ஸ்டீல் நிறுவனத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடு ரூ. 557 கோடி; இவ்வளவு பெரிய முதலீட்டுக்குத் தகுந்த இலாபம் சம்பாதித்துக் கொடுப்பதற்குப் பதில், 1970 மார்ச் முடிய அதில் ரூ. 172 83 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது"

என்று குழுவின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த நட்டத்தைத் தவிர, அதன் செயல்பாட்டில் உள்ள வேறு 6 பெரிய குறைபாடுகளையும் குழு எடுத்துக் காட்டியிருக்கிறது; மூன்று ஆலைகளிலும் குறைந்த உற்பத்தி -- அதிக உற்பத்திச் செலவு -- மிக அதிகமான மூலப் பொருள் பயன்பாடு -- அதிகப்படியான ஊழியர் -- குறைந்த உற்பத்தித் திறன் -- அதிகத் தேய்மானத்திலும் வட்டியிலும் கொண்டு விடும்படியாக மிக அதிகமான முதலீட்டுச் செலவுகளைக் குழு சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகளாகும்.

சிண்டிகேட் நகராட்சி உறுப்பினர் கழகத்தில் சேர்ந்தார்

மாயூரம், நவ. 29—

மயூரம் நகராட்சி மன்ற சிண்டிகேட் கட்சி உறுப்பினரான திரு. ஜி. வல்லப்பன் என்பவர், 28—11—71 அன்று மாயூரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். கிட்டப்பா முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார்.

அவருடன் சிண்டிகேட் கட்சியைச் சேர்ந்த ஆர். இராதாகிருஷ்ணன், கே.மணி, கே. சிங்காரவேலு ஆகியோரும் கழக உறுப்பினர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டனர்.

வணிகக் கப்பல்கள்--கடற்படை பொறுப்பில் இயங்கும்

பம்பாய், நவ. 30—

"இந்திய வர்த்தகக் கப்பல்களின் பொறுப்பை இந்தியக் கடற்படை ஏற்றுக் கொண்டிருக்கிறது" என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தப் பொறுப்பைக் கடற்படை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த ஏற்பாட்டின்படி, இந்தியக் கப்பல்கள் தங்கள் போக்குவரத்து விவரம் -- கடலில் எந்த நேரத்தில் எந்த இடத்தில் நிற்கும் என்ற விவரம் -- இந்தியத் துறைமுகங்களுக்கு வந்து சேரும் நேரம் -- புறப்படும் நேரம் ஆகியவற்றைக் கடற்படை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

கடற்படையின் முன்னனுமதி இல்லாமல் அவை வரவோ -- போகவோ கூடாது.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 2002 கார்த்திகை 15 (1-12-71) புதன்

புதிய மேயர்--துணை மேயர்

சென்னை மாநகராட்சி மன்றத்தின் புதிய மேயராகத் திருமதி காமாட்சி செயராமன் அவர்களும், துணை மேயராகத் திரு. என். வி. என். சோமு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

புதிய மேயரையும்--துணை மேயரையும் வரவேற்கிறோம்; நமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆண்டுதோறும் புதிய மேயர், துணை மேயர் தேர்தல் நடைபெறுவது வாடிக்கைதான் என்றாலும், இவ்வாண்டு நடந்திருக்கும் மேயர் தேர்வு தனிச் சிறப்புக்குரியதாகும்; ஒரு பெண்மணியை சென்னை மாநகரின் மேயராகத் தேர்ந்தெடுத்ததன் மூலம் மாநகராட்சியின் ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம், தாய்க்குலத்துக்குச் சிறப்புத் தேடித் தந்துள்ளது. இரண்டாவது பெண் மேயர் என்ற சிறப்பினைத் திருமதி காமாட்சி செயராமன் பெறுகிறார். (முதல் பெண் மேயர் திருமதி தாரா செரியன் ஆவார்.) சென்னை மாநகராட்சி இதுவரை 42 மேயர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது; ஆனால் இரண்டே பெண்மணிகள்தாம் மேயர் பதவி வகித்திருக்கின்றனர். அந்த இருவரில் ஒருவர் திருமதி காமாட்சி செயராமன் என்பதும்--அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதும் கூறிப் பெருமைப்படத்தக்கதாகும்.

தொன்றுதொட்டுச் சென்னை மாநகராட்சி கடைபிடித்துவரும் மரபுக்கேற்ப இந்த ஆண்டு பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் மேயர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரே பிராமண மாநகராட்சி உறுப்பினரான திரு. ந. செயராமன்தான் அடுத்த மேயராக வருவார்' என்று உறுதியாக நம்பியிருந்தோம்; ஆனால், எதிர்பாராவிதமாக அவரை இயற்கை ஆட்கொண்டுவிட்டது.

'கழகத்தின் துவக்க கால முதல் தீவிரத் தொண்டராக இருந்து கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர் ஒரு துடிப்புமிக்க இளைஞரை மறைவுகொடுத்துவிட்டோமே' என்ற ஏக்கம் ஒருபுறம்; 'மேயராக வரவிருந்த ஒரே தோழரை இழக்க நேரிட்டுவிட்டதே' என்ற துயரம் மறுபுறம்; என்றாலும், வழிகின்ற கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, தொண்டர் செயராமன் குடும்பத்தைத் தேற்றும் நிலையிலும்--மேயர் பதவியை அந்தக் குடும்பத்துக்கே எப்படியும் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும்--கழகம், திருமதி காமாட்சி செயராமனை மாநகராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது; அவரையே மேயராக்கி இன்று மகிழ்கிறது.

"கழகத்தைச் சேர்ந்த எந்தத் தொண்டரையும் -- அவர்தம் குடும்பத்தையும் கழகம் கைவிடுவதில்லை" என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

கணவர் இருக்கவேண்டிய மேயர் இருக்கையில் அவரது துணைவியாரை இருக்க வைத்திருக்கிறது--கழகம்; அவரும் தமது கணவர் ஆற்றிய பணியைத் தொடர்ந்து நடத்திட--தோழர் அன்னாரின் வழியில் பணியாற்ற உறுதிபூண்டிருப்பதாக நகர மக்களுக்கு உறுதியளித்திருக்கிறார்.

மாநகரின் நலன்களைப் பெருகச் செய்வதில் புதிய மேயர் அக்கறை காட்டுவார் என்பதில் ஐயமில்லை; இந்தியத் தலைமையமைச்சராகத் திருமதி இந்திரா காந்தி இருந்துவரும் இந்த நேரத்தில், சென்னை மாநகராட்சியின் மேயராகத் தாய்க்குலத்தைச் சேர்ந்த ஒருவர் இருப்பது தனிச் சிறப்புக்குரியது ஒன்றாகும்.

நாடு மிக நெருக்கடியான நிலையில் இருந்துவருகிறது; இந்த நேரத்தில் தாய்க்குலம் தலைநிமிர்ந்து நாடு காக்கும் பணிகளில் ஈடுபடத் திருமதி காமாட்சி செயராமன் போன்றவர்கள் ஊக்கமளிப்பார்கள் என்று நம்பலாம்.

துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தோழர் என். வி. என். சோமு அவர்களைப்பற்றி அதிகமாகக் குறிப்பிடத் தேவையில்லை; சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே அவரை நாடறியும்; நமது கழகத்தின் துணைப் பொதுச்செயலாளரும்--தொழிலாளர் நலத்துறை அமைச்சருமான மாண்புமிகு என். வி. நடராசன் அவர்களின் மூத்தமகன் என்பது மட்டுமல்லாமல் கழகத்தின் துடிப்புள்ள இளைஞர்களில் ஒருவராகவும்--வழக்கறிஞராகவும்--தொழிற் சங்கத் தலைவராகவும்--மாணவர் தலைவராகவும் அவர் நாட்டு மக்களிடையே அறிமுகமானவர்; பச்சிளங் குழந்தையாக இருந்தபோதே, கட்டாய இந்தியை எதிர்த்துச் சிறைசென்ற பெற்றோருடன் சிறைவாசம் ஏற்றவர்.

இத்துணைச் சிறப்புக்களுடன்கூடிய நண்பர் சோமு அவர்கள், தந்தையாரைப் போலவே எல்லோருடனும் எளிமையாகவும், இனிமையாகவும் பழகும் இயல்புடையவர்; அடக்கமும் அமைதியும், பொதுத் தொண்டில் ஆர்வமும் கொண்டவர்; இவர், மேயர் திருமதி காமாட்சி செயராமன் அவர்கள் ஆற்றிடும் பணிகட்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்து--மாநகரின் மேம்பாட்டுக்குப் பாடுபடுவார் என்று உறுதியாக நம்பலாம்.

புதிய மேயரும்--துணை மேயரும் தங்கள் பதவிக்காலத்தில் சென்னை நகருக்குக் குறிப்பிடத்தக்க பல சாதனைகளைப் புரிவார்கள் என்பதில் ஐயமில்லை; அவர்கள் இருவருக்கும் மாநகராட்சி உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேற்றுமைகளை மறந்து ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

புதிய மேயரையும்--துணை மேயரையும் வரவேற்று வாழ்த்திடும் இத்தருணத்தில், கடந்த ஆண்டு மேயராகவும், துணை மேயராகவும் இருந்து குறிப்பிடத்தக்க பல நற்செயல்களைப் புரிந்த திரு. சா. கணேசன் அவர்களையும், திரு. சிலார்மியான் அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

ஐ. நா. உறுப்பு நாடுகளின் மக்கள் தொகையைவிட அதிகம்

இந்தியாவிலுள்ள வங்க அகதிகள் எண்ணிக்கை சுவீடன் பிரதிநிதி சுட்டிக்காட்டுகிறார்

நியூயார்க், நவ. 30—

சுவீடன் நாட்டுப் பிரதிநிதி ஐ. நா. பேரவையின் சமூக--கலாச்சாரக் குழுவில் ஐ. நா. நிறுவனத்தின் உறுப்பு நாடுகளில் பெரும்பாலானவற்றின் மக்கள் தொகையைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கையில் வங்க அகதிகள் இந்தியாவில் இருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டார்.

இந்தியாவில் உள்ள வங்கதேச அகதிகளின் எண்ணிக்கை 22-ந் தேதி நிலவரப்படி 97,96,076 ஆகும்.

ஐ. நா. வில் உள்ள உறுப்பு நாடுகள் சிலவற்றின் மக்கட் தொகை வருமாறு:—

ஆஸ்திரியா 74,45,000, பல்கேரியா 85,50,000, கம்போடியா 70,00,000, டென்மார்க் 49,00,000, ஃபின்லந்து 46,00,000, கானா 90,50,000, ஈராக் 92,50,000, இஸ்ரேல் 28,41,100, ஜோர்டான் 21,45,000, நியூசிலாந்து 27,80,839 நார்வே 39,15,000, சவூதி அரேபியா 60,00,000, சிங்கப்பூர் 20,16,800, சுவீடன் 81,25,000, சுவிட்சர்லாந்து 54,29,061, உகாண்டா 95,30,000, வெனிசுலா 75,23,999, யேமன் 45,00,000.

ஒரு கோடிக்கும் குறைவாக மக்கள் தொகை கொண்டதாக மேலும் 40 நாடுகள் இருக்கின்றன.

பூரி--ஹௌரா இரயில் விபத்து

நாச வேலை காரணமா?

புவனேசுவரம், நவ. 30—

புவனேசுவரத்துக்கு அருகில் பூரி-ஹௌரா எக்ஸ்பிரஸ் இரயிலுக்கு ஏற்பட்ட விபத்துக்கு நாச வேலையே காரணமாக இருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

நேற்று இந்த இரயில் தடம் புரண்டதன் காரணமாக 50 பேர் காயமடைந்தனர்.

இது குறித்து விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; விசாரணைக்கு உதவி செய்யும் பொருட்டு போலீசு -- மற்றும் இரயில்வே பாதுகாப்புத் துறைகளின் மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டன; ஆனால்இரவு

(8-ம் பத்தி பார்க்க)

சென்னையில் இருட்டடிப்பு ஒத்திகை

உயர் அதிகாரிகள் கூட்டத்தில் ஆய்வு

அடுத்த நடவடிக்கை பற்றி அதிகாரி விளக்கம்

சென்னை, நவ. 30—

இந்தியா – பாகிஸ்தான் போர் நெருக்கடி அதிகரித்திருப்பதால், போர்க் காலப் பயிற்சியாகச் சென்னை நகரில் கடந்த 27-ம் நாளன்று இருட்டடிப்புச் செய்யப்பட்டது தெரிந்ததே; இரவு 8 மணியிலிருந்து 8-30 மணி வரை இந்த இருட்டடிப்பு ஒத்திகை நடந்தது.

சென்னையில் இருட்டடிப்பு நடத்தியது பற்றிக் கோட்டையில் அதிகாரிகள் கூடி ஆராய்ந்தார்கள்.

இந்தக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சபாநாயகம், தலைமைப் போலீசு அதிகாரி (ஐ.ஜி.) அருள், சென்னைப் போலீசு ஆணையர் ஷெனாய், மாநகராட்சி ஆணையர், துறைமுகம் — இரயில்வே — தொலைபேசித் துறைகளின் அதிகாரிகள், மற்றும் முப்படையைச் சேர்ந்த அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

கூட்ட முடிவில் தமிழக அரசு அதிகாரி டி. வி. வெங்கட்ராமன், செய்தியாளரிடம் கூறியதாவது:—

"இந்தக் கூட்டத்தில் 27-ம் நாள் நடத்தப்பட்ட இருட்டடிப்பு ஒத்திகை பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டது; போலீசு அதிகாரி பரமகுரு அந்த இருட்டடிப்புப் பற்றிக் கூறிய கருத்துக்கள் இந்தக் கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டன.

இனிமேல் சென்னையில் உள்நாட்டுப் பாதுகாப்பு இயக்குநராகத் துணைப் போலீசு ஐ.ஜி. என். கிருஷ்ணசாமி நியமிக்கப்பட்டுள்ளார்; இவருடைய அலுவலகம் ஐ.ஜி. அலுவலகத்தில் இருக்கும்.

நவ. 27-ம் நாள் நடந்த இருட்டடிப்பு ஒத்திகையின்போது நகரின் சில பகுதிகளில் மட்டும் சிறிது வெளிச்சம் தெரிந்தது; அடுத்த ஒத்திகையின்போது அந்தப் பகுதிகளிலும் விளக்குகளை அணைத்துவிடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

வீடுகளில் உள்ள முற்றங்கள் -- பின்புறங்கள் -- காம்பவுண்டு பகுதிகளில் உள்ள வெளிச்சம் கூட மேலே தெரிகிறது; அந்த வெளிச்சம் தரையில் விழும்போது மேலே தெளிவாகத் தெரிவதால், அந்த விளக்குகளையும் அணைத்துவிட வேண்டும்.

சன்னல் கண்ணாடி மூலமும் -- ஓட்டு சாய்ப்பில் உள்ள கண்ணாடி மூலமும் வெளிச்சம் தெரிகிறது; ஆகவே, அவைகளையும் அடைத்துவிட வேண்டும்; அல்லது வெளிச்சம் வெளியே தெரியாதபடி பொதுமக்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

27-ம் நாள் நடந்த ஒத்திகையின்போது சாலைகளில், கார் -- பஸ் -- மற்ற வாகனங்கள் போக அனுமதிக்கப்பட்டன; அந்தக் கார்களில் வெளிச்சமும் மேலே தெளிவாகத் தெரிந்தது; ஆகவே, அடுத்த ஒத்திகையின்போது அபாயச் சங்கு ஊதியதும், கார் -- பஸ் மற்றும் எல்லா வாகனங்களையும் உடனே சாலையின் ஓரமாக நிறுத்தி, விளக்குகளை அணைத்துவிட வேண்டும்.

ஏறத்தாழ 15 நிமிடங்கள் வரை கார் -- பஸ் ஓடக்கூடாது.

அடுத்த ஒத்திகையின்போது கார் -- பஸ்கள் நிறுத்தப்பட இருப்பதால், இரயில் -- விமானம் -- பஸ்களுக்குப் போக இருப்பவர்கள் வழக்கமாக புறப்படும் நேரத்தைவிட அரை மணி முன்னதாகவே புறப்படும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இருட்டடிப்பு நடக்கும் போது, என்ன நடக்கிறது என்று பார்க்கும் ஆவலில், பொதுமக்கள் சாலைகளுக்கு வந்துவிடுகிறார்கள்; இதனால் ஆம்புலன்சு போன்ற அவசர வாகனங்களுக்கு இடைஞ்சல் ஏற்படும்; ஆகவே, இருட்டடிப்பு நேரத்தில் பொதுமக்கள் வெளியே வரவேண்டாம்; இதற்கு ஏற்றவாறு போலீசுப் பாதுகாப்பும் போட்டுள்ளோம்; ஊர்க்காவல் படையினரும் -- சீருடையினரும் அவர்களுக்கு உதவியாக இருப்பார்கள்.

'அபாயச் சங்குகள் ஒலிப்பது சரியாகக் கேட்கவில்லை' என்று தெரிவிக்கப்பட்டது; அடுத்த ஒத்திகையின்போது எல்லா சங்குகளும் ஒரேசமயத்தில் தொடங்கி எல்லா இடங்களுக்கும் கேட்கும்படி ஒலிக்கும்.

சில தொழிற்சாலைகளில் அபாயச் சங்கு ஒலிக்கத் தொடங்கிய பிறகு தங்களுடைய தொழிற்சாலை 'ஷிப்டு' முடிவதை அறிவிக்கத் தங்கள் சங்கை ஊதியதால் பொதுமக்களுக்குக் குழப்பம் ஏற்பட்டுவிட்டது; ஆகவே, அபாயச் சங்கு ஊதத் தொடங்கிய பிறகு ஒத்திகை முடியும் வரையில் இடைக்காலத்தில் தொழிற்சாலைகள் சங்கு ஊதக்கூடாது.

அடுத்த ஒத்திகை நடப்பது பற்றி மூன்று தேதிகள் அறிவிக்கப்படும்; அந்தத் தேதிகளில் ஏதாவது ஒருநாள் ஒத்திகை நடக்கும்; எந்த தேதி என்பது பின்னால் அறிவிக்கப்படும்."

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்

30 -- 11 -- 71 அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற 38-வது குலுக்கலில் அளிக்கப்பட்ட பரிசுகள் விவரம்:--

முதல் சிறப்புப் பரிசு: ரூ. 2,50,000

'ஐ. ஓ.' வரிசை எண்: 710995

ஒவ்வொரு தொடரிலும் சாதாரணப் பரிசு பெற்ற எண்கள் வருமாறு:---

'ஐ. எம்.' வரிசை

ஓர் இரண்டாவது பரிசு: ரூ. 1,00,000
065046

5 மூன்றாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்
084877 268031 506498 544060 773898

10 நான்காவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
024409 043833 160802 219709 283002 331795 456044 540839 715433 720149

50 ஐந்தாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
038009 039810 045633 052492 070915 080424 107815 162782 168431 180899 201683 244391 303676 308794 324288 340682 344097 364011 366014 448082 479614 487412 489628 501962 529295 530219 533658 534282 571321 573905 575754 607058 614352 639381 660004 666625 679089 739184 752409 754306 766483 767480 806919 858306 861392 863884 899334 921927 959016 981538

1,000 ஆறாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும்:—
0249 0573 1019 1455 1993 2089 5238 6473 8069 9602

'ஐ. என்.' வரிசை

ஓர் இரண்டாவது பரிசு: ரூ. 1,00,000
740277

5 மூன்றாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்
190781 269508 670349 789154 847651

10 நான்காவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
087720 146003 190201 191218 468351 734768 921219 921610 968198 986841

50 ஐந்தாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
068974 069705 071350 077414 093594 103721 112823 148205 155433 157672 164823 185128 190585 199253 229923 258733 283009 293992 304412 309830 344731 450112 478996 506062 506093 529713 550204 657271 675349 675471 701627 708366 737164 746166 752584 760483 780604 792354 802044 813713 835693 839948 880862 883864 903607 915401 916274 922597 957601 971202

1,000 ஆறாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும்:—
2043 2735 3410 4193 4733 5132 7553 8032 8322 9033

'ஐ. ஓ.' வரிசை

ஓர் இரண்டாவது பரிசு: ரூ. 1,00,000
458844

5 மூன்றாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 10 000 விதம்
065551 246339 672582 744019 885706

10 நான்காவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
014796 045594 097284 226469 460191 578084 616285 728513 832038 881972

50 ஐந்தாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
007506 016363 039193 041494 045169 072509 098919 105150 132925 134984 219988 235723 243526 258801 271004 285977 286128 312707 324167 356210 415119 415342 423305 431138 471695 484795 515698 528699 542575 581449 681682 723284 800263 808957 812036 820369 824889 825232 831519 851317 857582 862799 901507 908823 936731 955609 964116 966408 981782 994560

1 000 ஆறாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும்:—
0780 0781 2116 2668 2728 5993 6332 6811 6996 7798

'ஐ. பி.' வரிசை

ஓர் இரண்டாவது பரிசு: ரூ. 1,00,000
042307

5 மூன்றாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்
022909 712230 742786 745889 950749

10 நான்காவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
256049 505077 541763 621894 628276 701390 755609 842789 917104 980462

50 ஐந்தாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
030057 030852 041278 047815 067045 082706 114013 114291 128613 148598 181149 188855 220075 238339 244484 274311 291274 318191 319604 349137 392316 395801 437987 439073 467164 472966 493832 526798 554692 621832 681646 694041 700164 710672 732165 746336 805083 811251 814640 815261 829286 873282 883158 892298 900702 941820 963382 965950 967384 982597

1,000 ஆறாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும்:—
0067 0990 0994 1237 1637 2321 5020 6183 6186 8141

'ஐ. க்யூ.' வரிசை

ஓர் இரண்டாவது பரிசு: ரூ. 1,00,000
700198

5 மூன்றாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்
062672 132421 225533 294460 804034

10 நான்காவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
037462 273763 313784 564570 569592 650899 691831 727519 756150 856412

50 ஐந்தாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
032393 038171 051222 051720 057251 067746 074536 076909 092884 093709 129108 143175 150225 190304 203876 242912 253586 254419 276658 289641 302659 315975 351953 377114 379434 405186 441208 550362 632150 633217 663053 676666 703203 721304 744291 744643 754415 763900 783680 800079 833054 842418 845074 848032 865650 892372 918394 935003 948228 964502

1 000 ஆறாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும்:—
0404 0842 2222 3041 3360 4329 5751 7515 8851 9065

முதல் பரிசு -- இரண்டாவது பரிசு -- மூன்றாவது பரிசுகள் பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெற சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்ட இயக்குநர் அலுவலகத்திலும், 4-வது பரிசு முதல் 6-வது பரிசு வரை பரிசு பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெறத் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு துணைக் கருவூலத்திலும் அதற்குரிய படிவங்களை நிரப்பிக் கொடுத்துப் பரிசுகளைப் பெறலாம்.

எழுதித் தரவேண்டிய படிவங்கள், பரிசுகள் பெறவேண்டிய அலுவலகங்களில் கிடைக்கும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது ரிசர்வ் பாங்கு அட்டவணையில் உள்ள வங்கிகள் மூலமாகவோ கொடுக்கலாம்.

பரிசுச் சீட்டுப் பற்றி விவரங்கள் எதுவும் தேவைப்பட்டால், 'இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2' என்ற முகவரிக்கு எழுத வேண்டும்.

விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள கடைசி தேதி: 27-12-1971

39-வது பரிசுச் சீட்டுக் குலுக்கல்

39-வது பரிசுச் சீட்டுக் குலுக்கல் 1971 டிசம்பர் 31-ந் தேதி நடைபெறும்; அதற்கான பரிசுகள்—

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

ஒவ்வொரு வரிசைக்கும் பரிசுகள்	மொத்தத் தொகை
1. முதல் பரிசு ரூ. 1 இலட்சம் வீதம் ஒன்று	1,00,000
2. இரண்டாவது பரிசுகள் ரூ. 10 000 வீதம் -- 5	50,000
3. மூன்றாவது பரிசுகள் ரூ. 5,000 வீதம் -- 10	50 000
4. நான்காவது பரிசுகள் ரூ. 1,000 வீதம் -- 50	50 000
5. ஐந்தாவது பரிசுகள் ரூ. 100 வீதம் -- 1,000	1 00 000
	3 50,000

ஒவ்வொரு வரிசைக்கும் மொத்தப் பரிசுகள்: 1066

மொத்தப் பரிசுகள்: 4264

மொத்தப் பரிசுத் தொகை:

ரூ. 14 இலட்சம்

அடுத்த குலுக்கல்: 31-12-1971
அடுத்த குலுக்கலுக்கு வரிசைகள்: ... 4 (நான்கு)
'ஐ.ஆர்.' முதல் 'ஐ.யு' வரை

இதுவரை 264 இலட்சாதிபதிகளைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது! உங்கள் பணம் உங்களுக்கும் நாட்டிற்கும் உதவுகிறது! உங்கள் நல்வாய்ப்பினைச் சோதிக்கலாமே!

ஒரு சீட்டின் விலை ரூ. 1-தான்

தே. அரங்கநாதன, இயக்குநர், தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

அல்பேனிய தேசீய விழாவில் அபத்தப் பேச்சு

பீகிங், நவ. 30—

இங்கு நடைபெற்ற அல்பேனிய தேசிய நாள் விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் -- இந்தியாவும் கண்டனம் தெரிவித்து வெளியேறியிருக்கின்றனர்.

நிகழ்ச்சியில் அல்பேனியத் தூதுவர் பேசுகையில், இரஷ்யாவை, 'ஏகாதிபத்தியவாதி' என்று குறிப்பிட்டதைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் வெளியேறின.

அதற்குப் பிறகு பேசிய சீனத் துணைத் தலைமையமைச்சர், 'பாகிஸ்தானுடனான தகராறுக்கு இந்தியாவே காரணம்' என்று குற்றஞ்சாட்டினார்.

சீனத் துணைத் தலைமையமைச்சர், 'இரஷ்ய ஆதிக்கவாதிகளின் உதவியுடன் இந்தியா கிழக்குப் பாகிஸ்தானில் இராணுவ ஆத்திரமூட்டங்களில் ஈடுபட்டிருக்கிறது' என்று கூறியதாக சீன வானொலி அறிவித்தது.

"வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராகப் பாகிஸ்தான் அரசும் -- மக்களும் நடத்தும் போராட்டத்துக்கு சீனா முழு அளவுக்கு ஆதரவு அளிக்கும்" என்றும் சீன அமைச்சர் கூறினாராம்.

இதனைக் கண்டித்து இந்தியப் பிரதிநிதிகள் வெளியேறினர்.

தி. பொ. வேதாசலம் நினைவு நாள்

சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் தி. பொ. வேதாசலனார் நினைவு நாள் கூட்டம் 22—11—71-ல் அண்ணாசாலை மத்திய நூலகக் கட்டடத்தில் திரு. சோ. இலக்குமிநாதன் பாரதியார் தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் இரா. செந்தாமரை, சு. வேலு, வி. எம். லெனின், கே. கோவிந்தசாமி, சைதை மாணிக்கம் மற்றும் பலர் பேசினர்.

'கிழக்கு வங்கத்தைப் பாகிஸ்தான் இழந்து விடும்'

'நினைத்துப் பார்க்கவும் இயலாத நிலை அந்தப் பகுதியில் தோன்றுவதும் உறுதி'

'சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கு ஒரே வழி'--- அமெரிக்க செனட் உறுப்பினர் கருத்தறிவிப்பு

கல்கத்தா, நவ. 30—

"இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியின் விளைவாகப் பாகிஸ்தான் கிழக்கு வங்காளத்தை இழந்துவிடும்.

"பாகிஸ்தான் என்பது இனிமேல் முன்போல் இரு பிரிவுகள் கொண்டதாக இருக்குமென்றோ, கிழக்கு வங்காளத்தில் பழைய ஆட்சி மறுபடியும் ஏற்பட முடியுமென்றோ என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை; அகதிகள் எந்தவிதமான அச்சமும் இன்றித் தமது தாய்நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிப்பது ஒன்றுதான் இந்தச் சிக்கலுக்குச் சரியான தீர்வு ஆகும்; இச்சூழ்நிலைக்கு, சேக் முஜிபுர் ரகிமானுடன் யாகியா கான் விவாதம் நடத்தித்தான் ஆகவேண்டும்"

என்று அமெரிக்க செனட் உறுப்பினர் பிராங்க் சர்ச் என்பவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்; அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"பாகிஸ்தானிடமிருந்து நாடு பிடிக்க வேண்டுமென்ற ஆசை இந்தியாவுக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை; இந்தியாவில் ஏராளமான அகதிகள் வந்து குவிந்திருக்கிறார்கள் என்பது ஒன்றுதான் இந்தப் பிரச்சினையில இந்தியாவுக்குள்ள தொடர்பாகும்.

"பாகிஸ்தான் ஆட்சியாளர்களும் -- கிழக்கு வங்காளத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் சேர்ந்து ஒப்புக்கொள்ளும் தீர்வை இந்தியாவும் ஒப்புக்கொள்ளும் என்றே நினைக்கிறேன்.

"பதட்ட நிலையைத் தணிப்பதற்கு ஏதாவது வழி கண்டுபிடிக்க வேண்டும்; இந்தியாவுக்கும் – பாகிஸ்தானுக்குமிடையே போர் மூளுவதையும் தவிர்க்க வேண்டும்.

"இவ்வளவு பெரிய அகதிகள் சுமையைத் தாங்கிக்கொண்டிருந்தபோதிலும் இந்தியா காட்டும் நிதானம் பாராட்டுக்குரியதாகும்."

லாகூர் மக்கள் நம்பிக்கை இழந்தனர்

நகரை விட்டு ஓட்டம்

இலண்டன், நவ. 30—

இஸ்லாமாபாத்திலும், இராவல் பிண்டியிலும் தீவிரமான இருட்டடிப்பு ஒத்திகைகள் நடத்தப்படுகின்றன; தற்காப்புக்கான ஏற்பாடுகளும் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பல இடங்களில் துருப்புகள் மறைந்திருந்து சுடுவதற்குப் பள்ளங்கள் வெட்டப்பட்டு வருகின்றன; இந்த வேலைக்குப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளும் -- சிறைக் கைதிகளும் நிர்ப்பந்தமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள்.

உடல்நிலை சிறிது தேறிய நோயாளிகள் மருத்துவமனைகளிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள்.

லாகூரில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்; ஏராளமானவர்கள் நகரை விட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள்; சிலர் வண்டிகளிலும், சிலர் ஒட்டகங்களின்மீதும் தமது சாமான்களைத் தூக்கிப் போட்டுக்கொண்டு சென்றவண்ணமிருக்கின்றனர்; வசதியுள்ள சிலர், மோட்டார்களில் தமது முக்கியமான உடைமைகளைப் போட்டுக்கொண்டு ஓடுகிறார்கள்.

இரு மாகாணங்கள் செயலற்றுவிட்டன

தேசிய அவாமி கட்சியும் இப்போது தடை செய்யப்பட்டிருக்கிறது; அதனுடைய முக்கிய உறுப்பினர்களை மேற்குப் பாகிஸ்தானில் கலகத்தைத் தூண்ட முயற்சிக்கிறார்கள் என்று யாகியா கான் கூறுவது உண்மையாக இருக்குமானால், பாகிஸ்தான் மூன்று முனைகளில் போரை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இந்தத் தடையின் பலனாகப் பாகிஸ்தானில் மேலும் இரண்டு மாகாணங்கள் செயலற்றவைகளாக்கப்பட்டிருக்கின்றன.

இப்போது பஞ்சாப், சிந்து ஆகிய இரு மாகாணங்களில் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

இந்தத் தகவல்களை, 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையின் நிருபர் முர்ரே சேயிஸ் என்பவர், அப்பத்திரிகைக்கு அனுப்பியுள்ள செய்தியில் கூறியிருக்கிறார்.

மதுராந்தகத்தில் டிராக்டர் நிலையம்

வேளாண்மைக் கருவிகள் விற்பனை

சென்னை, நவ. 29—

விவசாயிகளுக்கு டிராக்டர்களை வாடகைக்கு விடுவதற்கான ஒரு நிலையத்தை வேளாண்மைத் துணைத் தொழில்கள் கார்ப்பரேஷன் மதுராந்தகத்தில் திறக்கும்.

இங்நிலையத்தில் விவசாயிகட்கு 'நியாயமான கட்டண'த்தில் டிராக்டர்கள் வாடகைக்குக் கிடைக்கும்.

மேலும், இங்நிலையத்தில் எல்லா விதமான விவசாயக் கருவிகளும் விற்பனை செய்யப்படும்.

கரீம்கஞ்ச் நகரில் முழு இருட்டடிப்பு

கரீம்கஞ்ச், நவ. 30—

கரீம்கஞ்ச் நகரில் நேற்றுமுதல் இரவில் முழு இருட்டடிப்புச் செயல்படுத்தப்பட்டிருக்கிறது; காலவரம்பின்றி இது நடைமுறையில் இருக்கும்.

அசாம் மாநிலத்தில் எல்லைப் பகுதியில் கரீம்கஞ்ச் நகரம் உள்ளது; இந்த முக்கிய நகரின்மீது பாகிஸ்தான் படையினர் சென்ற சில நாட்களாக அவ்வப்போது சுடுகிறார்கள்.

(2-ம் பத்தித் தொடர்ச்சி)

1 மணி வரையில் முயன்றும் அலைகளால் தடயங்கள் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை; அதன் பிறகு பாதையைச் சீர் செய்ய அனுமதிக்கப்பட்டது.

ஒருசில இடங்களில் 'பிஷ்'பிளேட்டுகள் அகற்றப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது; ஆனால் இது உறுதிப்படுத்தப்படவில்லை.

நிகழ்ச்சி நடந்த இடத்தைப் பார்வையிட்ட மாநில அமைச்சர் நீலமணி ரவுத்ராயும் விபத்துக்கு நாச வேலை நடந்திருக்கக்கூடும் என்று கருத்தறிவித்தார்.

நியாய விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு

டிசம்பர் முதல் வாரத்தில் நடைமுறைக்கு வருகிறது

உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அறிவிப்பு

சென்னை, நவ 30—

!! நியாய விலையில் மக்களுக்கு அரிசி — சர்க்கரை ஆகிய இன்றியமையா உணவுப் பண்டங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; டிசம்பர் முதல் வாரத்திலிருந்து இந்த ஏற்பாடு முழுமையாக நடைமுறைக்கு வரும்.

!! இந்த ஏற்பாட்டின்படி, கிலோ சர்க்கரை இரண்டு ரூபாய்வீதம் விற்கப்படும்; படி அரிசி விற்பனைக் கடைகள் மூலமும் மாதவரம் பால் விற்பனை செய்யும் 'டிப்போ'க்கள் மூலமும் முதல் ரகப் பச்சரிசி — புழுங்கல் அரிசி நியாய விலையில் விற்கப்படும்."

என்று உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"சர்க்கரை ஆலை அதிபர்கள் இரண்டு நாட்களுக்குமுன்பு என்னைச் சந்தித்துப் பேசியபோது, சர்க்கரை விலையேற்றம் குறித்து அவர்களுடன் விவாதித்தேன்; 'சர்க்கரை விலைக் குறைப்புக்காக ஒத்துழைக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டேன்; அவர்கள் இணக்கம் தெரிவித்தார்கள்; அப்படி, சர்க்கரை ஆலை அதிபர்களுக்கு மாதா மாதம் வரும் 'கோட்டா'வில் பத்து சதவிகிதத்தை, குவிண்டால் ரூ 152 வீதம் (எக்சைஸ் வரி நீங்கலாக) அரசாங்கத்திற்கு விற்க ஒப்புக்கொண்டுள்ளனர்; கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்தும் இதேபோல சர்க்கரை பெறப்படும்; இதற்குத் தொழில் அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு மத்திய விற்பனைச் சங்கங்கள் (ஸ்டோர்ஸ்) மொத்த வியாபாரிகளாகப் பணியாற்றுவார்கள்; மாவட்டங்களில் எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களும் கிலோ சர்க்கரை ரூ 2-க்கு விற்பார்கள்; மற்றப்படி பொது மார்க்கெட்டில் சர்க்கரை விற்கும் வியாபாரிகள், இந்த நியாய விலை சர்க்கரையை விற்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

சென்னை நகரைப் பொறுத்தவரையில், படி அரிசிக் கார்டுக்கு அரிசி கொடுக்கும் கடைகளில், கார்டுதாரர்களுக்குச் சர்க்கரை விற்கப்படும்; வெளிச் சந்தை அல்லது பொதுச் சந்தையில் சர்க்கரை வியாபாரம் செய்யாத கூட்டுறவு மளிகைக் கடைகள் — சூப்பர் மார்க்கெட்டுகள் ஆகியவற்றின்மூலம் மற்றவர்களுக்குக் கிலோ ரூ. 2-க்கு சர்க்கரை விற்கப்படும்; இந்த ஏற்பாடு டிசம்பர் முதல் வாரத்துக்குள் நடைமுறைக்கு வரும்; இவற்றின்மூலம், டிசம்பர் திங்களில் 2,850 டன் சர்க்கரை எல்லா இடங்களிலும் தட்டுப்பாடின்றிக் கிடைக்கும் வகையில் வினியோகிக்கப்படும்.

அரிசி விற்பனையில் மனநிறைவு

பால் 'டெப்போ'க்கள் மூலம் அரிசி வினியோகிப்பதில் வெற்றி ஏற்பட்டுள்ளது; பொதுவாக, 'பச்சரிசி வாங்குவோர் அதிகம் இல்லை' என்ற கூற்று சரியன்று என்பது கடந்த இரண்டு நாட்களாக ஆகும் பச்சரிசி விற்பனை மூலம் தெரிகிறது; இரண்டு நாட்களில் மட்டும் 900 மூட்டை பச்சரிசி விற்கப்பட்டுள்ளது."

நெரிசலைக் குறைப்பதற்காகக் கீழ்க்கண்ட முறைகளை மாற்றி அமைத்திருக்கிறோம்:—

1. படி அரிசித் திட்டக் கடையில், ஏற்கனவே கார்டுதாரர்களுக்கு வழங்கப்படும் அளவுக்கு மேலாகக் கார்டு ஒன்றுக்கு 15 நாட்களுக்கு 6 கிலோ அரிசி வாங்கிக்கொள்ளலாம்.
2. பால் 'டெப்போ'க்களில் இப்போது 2 நாட்களாக நியாய விலை அரிசி விற்றுவருகிறோம்; இங்கு அரிசி வாங்குவோர் நெரிசலைக் குறைப்பதற்கும், பொது மக்களுக்கு அரிசி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், மத்தியதர வகுப்பினருக்கு — பால் கார்டு வைத்திருப்போருக்கு 15 நாட்களுக்கு 10 கிலோ அரிசி வீதம் விற்கப்படும்; இந்த ஏற்பாடும் டிசம்பர் முதல் வாரத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.

செய்தியாளர் கேள்விக்கு உணவு அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"அரிசி போதுமான அளவுக்குக் கையிருப்பில் உள்ளது; அது பற்றிப் பிரச்சினையே இல்லை; ஆனால், பயன்படுத்துவோருக்கு இது போய்ச் சேரவேண்டும்; தவறுதலுக்கு இடம் ஏற்படாமல் மக்கள் ஒத்துழைக்கவேண்டும்; இந்த ஏற்பாட்டின்மூலம் 6,000 டன் அரிசி அரசு இருப்பிலிருந்து செலவாகும்.

பொங்கலுக்குப் பிறகு — அறுவடை முடிந்து அரிசி ஏராளமாக மார்க்கெட்டுச்கு வரும்; அப்போது விலை கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கிறோம்."

ஆந்திரத்திற்கு சென்னையிலிருந்து புதிய பேருந்து

சென்னை, டிச. 1—

சென்னையிலிருந்து ஆந்திராவில் உள்ள பொதட்டூர் பேட்டைக்குப் புதிய பேருந்துவிடத் தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது; இன்று முதல் இது நடைமுறைக்கு வருகிறது.

சென்னை—பொதட்டூர்பேட்டை பேருந்து வழித்தட (ரூட்) எண் 72-பி; இந்தப் பேருந்து, வில்லிவாக்கம் — ஆவடி இரயில் நிலையம் — திருவள்ளூர் — பட்டரைப் பெரும்புதூர் — கனகம்மாள்சத்திரம் — திருத்தணி — இராமகிருஷ்ணபேட்டை — பாலாஜி கண்டிகை வழியாகப் பொதட்டூர்பேட்டை செல்லும்.

சென்னை — பிராட்வேயிலிருந்து பகல் 3-45 மணிச்குப் இப்பேருந்து புறப்படும்; பொதட்டூர்பேட்டையிலிருந்து காலை 5-45 மணிக்குப் புறப்படும்; பயண நேரம் — 4 மணி 15 நிமிடம்; கட்டணம் ரூ. 3.95.

சென்னை — சோளிங்கர் பாதை மாற்றம்

சென்னை — சோளிங்கர் (ரூட் 86) பேருந்து மார்க்கத்தில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது; இந்தப் பேருந்து, வில்லிவாக்கம் — ஆவடி இரயில் நிலையம் — திருவள்ளூர் — பட்டரைபெரும்புதூர் — அரககோணம் — கைலாசபுரம் — கூடலூர் வழியாகச் செல்லும்.

சென்னையிலிருந்து காலை 6-மணி, பிற்பகல் 1-மணி, மாலை 6-30 மணிக்குப் பேருந்துகள் புறப்படும்; சோளிங்கரிலிருந்து காலை 5-30 மணி, பிற்பகல் 12 மணி, மாலை 6-மணிக்கு புறப்படும்; பயண நேரம் 3 மணி 30 நிமிடம்; கட்டணம் ரூ. 3.45.

மகளிர் பேருந்து கூடுதலாகும்

மந்தவெளி — அண்ணா நகருக்கு (பேருந்து எண் 41), நெரிசல் நேரங்களில் கூடுதலாக 'மகளிர் பேருந்து' ஒன்று விடப்படும்.

எழும்பூர் — சைதாப்பேட்டைக்கு (18-ஈ) அதிகமாக 2 பேருந்துகள் விடப்படும்.

எழும்பூரில் முதல் பேருந்து காலை 5-24 மணிக்கும், கடைசிப் பேருந்து இரவு 9-மணிக்கும் புறப்படும்.

சைதாப்பேட்டையிலிருந்து முதல் பேருந்து காலை 6-19 மணிக்கும், கடைசிப் பேருந்து இரவு 9-55 மணிக்கும் புறப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

குடும்ப நலச் சிகிச்சைப் பிரிவு

திறப்பு விழா

சென்னை கஸ்தூரிபா காந்தி மருத்துவமனையில், பெண்களுக்கான குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சைக்கென 20 படுக்கைகள் கொண்ட பிரிவை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 2—12—71 மாலை 5 30 மணிச்குத் திறந்து வைக்கிறார்; இவ்விழாவுக்கு, மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் ஜே ஏ. அம்பாசங்கர் தலைமை வகிப்பார்.

வங்க தேச மக்களை வதைபட அனுமதியோம்

நிராயுதபாணிகளை நிர்மூலமாக்குவது சுதந்தரத்துக்கே அச்சுறுத்தலாகும்

நாடாளுமன்றத்தில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி எச்சரிக்கை

புதுடில்லி, நவ. 30—

"அண்மைப் பகுதி (வங்க தேச) மக்களை நிர்மூலமாக்குவதை நாம் அனுமதிக்க முடியாது; உலக நாடுகள் இதனை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

"விடுதலைப் படையினர் மட்டுமன்றி வங்க தேசத்திலுள்ள நிராயுதபாணிகளாக இருக்கும் மக்கள் அனைவரையும் நிர்மூலமாகுமாறு விடுவது நமது நாட்டின் நலனுக்கு உகந்ததன்று; அது நம்முடைய சுதந்தரத்திற்கும் — பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகும்; நாம் நிர்ணயித்துள்ள அடிப்படைக்கும் — அதன்மீது நாம் இன்று நிலைத்துள்ள தன்மைக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாகும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, நாடாளுமன்ற மேலவையில் சுட்டிக்காட்டிக் கூறினார்; உலகத்திலுள்ள 6-நாடுகளுக்குத் தாம் சென்றது பற்றி அளித்த அறிக்கையின்மீது நடைபெற்ற மூன்று மணி நேர விவாதத்திற்கும் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"சுதந்தரத்துக்குக் குறைவான எந்தத் தீர்வையும் வங்க தேச மக்கள் ஏற்கமாட்டார்கள்; உலக நாடுகளின் தலைவர்களிடமும் இதனைக் கூறியிருக்கிறேன்; அதனை மீண்டும் தெளிவுபடுத்துகிறேன்; முஜிபுர் ரகிமானை விடுதலை செய்து — அவரிடம் வங்க தேச நிலவரங்களை மேற்குப் பாகிஸ்தான் இராணுவ அரசு எடுத்துரைக்க வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார்; அவர் மேலும் கூறியதாவது:—

எதிர்காலத்தில் என்ன நேரிடும் என்பதை யாரும் முன்கூட்டியே ஏதும் கூற முடியாது; என்ன நேர்ந்தாலும் சரி— என்ன நடவடிக்கை எடுத்தாலும் சரி— நமது எல்லையில் பதட்ட நிலை உடனடியாகத் தணிந்துவிடப் போவதில்லை.

சமபலம் இல்லாத அளவிலேயே பாகிஸ்தான் இராணுவத்தை எதிர்த்து வங்க தேச விடுதலை வீரர்கள் மிகவும் துணிவுடன் போரிட்டு முன்னேறி வருகின்றனர்; அவர்களுக்கு நமது ஆதரவும் நல்வாழ்த்துக்களும் உண்டு.

இந்தியாவும்—பாகிஸ்தானும் எல்லையிலிருந்து படைகளைத் திரும்பப் பெறவேண்டும் என்று சில நாடுகள் யோசனை கூறுகின்றன; இந்தியப் படைகளைத் திரும்பப் பெற மாட்டோம்; அவ்வாறு திரும்பப் பெறுவது பாகிஸ்தானுக்குச் சாதகமாகிவிடும்; ஏற்கனவே இப்படி நடந்தும் இருக்கிறது; ஆகவே இந்த முறை அதற்கு இடம் கொடுக்கமாட்டோம்.

படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்பதை நான் நிச்சயமாக வரவேற்கிறேன்; ஆனால், திரும்பப் பெறப்பட வேண்டிய படை வங்காள தேசத்திலுள்ள பாகிஸ்தான் இராணுவம்தான்; அவர்கள் தங்கள் சொந்த நாட்டிலிருந்து (மேற்குப் பாகிஸ்தான்) வெகு தூரத்தில் (வங்காள தேசத்தில்) இருக்கிறார்கள்; அத்துடன் அவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள்; ஆகவே, தங்கள் குடும்பத்தாருடனும்— நண்பர்களுடனும் சேர்ந்து கொள்வதற்கு அவர்களை அழைத்துச் சென்றுவிட வேண்டும்.

வங்காள தேசப் பிரச்சினையைத் தீர்க்கப் பாகிஸ்தான் விரும்புகிறது என்பதற்கு அங்கிருந்து படைகளைத் திரும்பப் பெறுவதுதான் சரியான அடையாளமாகும்; பாகிஸ்தான் சமாதானத்தை விரும்புகிறது என்பதற்கும் அது சான்று ஆகும்.

இந்தியா ஆக்கிரமிப்புச் செய்யவில்லை; ஆனால் எல்லையின் எந்தப் பகுதியிலிருந்து ஆபத்து வந்தாலும், அதை முறையோடு சந்திப்போம்; காஷ்மீரிலோ, வேறு எந்தப் பகுதியில் இருந்தோ பாகிஸ்தான் தாக்கினால், எங்கள் முழுச் சக்தியையும் பயன்படுத்தி முறியடிப்போம்."

புதிய மேயர் — துணை மேயருக்குக் கலைஞர் வாழ்த்து

அமெரிக்காவிலிருந்து தந்திமூலம் தெரிவித்தார்

நியூயார்க், நவ. 30—

சென்னை மாநகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற மேயர் திருமதி காமாட்சி செயராமன், துணை மேயர் என். வி. என். சோமு ஆகியோருக்கு, அமெரிக்காவிலுள்ள 'ஸ்டேடன் தீவு' எனும் இடத்திலிருந்து தி. மு. கழகத் தலைவரும் — முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதி அவர்கள், தந்திமூலம் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

அண்ணாவுக்கு அஞ்சலி

புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன், அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலைக்குசென்று திருமதி காமாட்சி செயராமன் மாலை அணிவித்தார்.

அதன் பிறகு அண்ணா சதுக்கத்துக்குச் சென்று—அண்ணா காலடியில் மலர் வளையம் வைத்து வணங்கினார்.

தலைவர்கட்கு மாலை

முதலமைச்சர் கலைஞரின் இல்லத்திற்குச் சென்று, தயாளு அம்மாளுக்கு மாலை அணிவித்தார்.

அதன்பிறகு அண்ணா இல்லம் சென்று இராணி அம்மையார்—நாவலர் இரா. நெடுஞ்செழியன், சட்டப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு, தமிழரசு கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் ஆகியோர் இல்லங்களுக்கும் சென்று மாலை அணிவித்து ஆசி பெற்றார்.

திருமதி காமாட்சி செயராமனை நேற்று நிருபர்கள் சந்தித்தார்கள்; அதுபோது அவர் கூறியதாவது:—

"நான் முதன் முதலில், எனது வட்டமாகிய கொத்தவால்சாவடியில் பேரறிஞர் அண்ணாவின் சிலை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வேன்.

அடுத்து சென்னை நகரத்தை சுத்தமாகவும்—அழகாகவும் வைத்துக் கொள்ளவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வேன்.

இப்போது சென்னை நகரில் பல பகுதிகளில் நடைபாதை ஓரங்களில் மக்கள் குடியிருந்துவருகிறார்கள்; அவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்திலிருந்தும்— குடிசை மாற்றுவாரியத்திலிருந்தும் வீடுகள் வாங்கிக் கொடுப்பேன்.

பெண்களின் நலத்துக்காகவும், நல்வாழ்வுக்காகவும் பாடுபடுவேன்."

துணை மேயர்

வெற்றிச் செய்தி அறிவிக்கப்பட்டுப் பொறுப்பேற்றதும் துணை மேயர் என். வி. என். சோமு, அண்ணா கல்லறையில் மலர் வளையம் வைத்து வணங்கினார்.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் நாவலர் அவர்களுக்கு மலர் மாலை அணிவித்து ஆசிபெற்றார்.